இந்த வாத பித்த கபங்கள் உடல் முழுவதும் பரவியிருந்த போதிலும். முறையே தொப்புளுக்கு கீழே வாதமும். இதயத்திற்கும் தொப்புளுக்கும். இடையே பித்தமும். இதயத்திற்கு மேலே கபமும் குறிப்பாக இடம் பெற்றுள்ளன, இது மட்டுமல்ல. இவைகள் உடல் சம்பந்தமான எந்த நிலையிலும் இணை பிரியாமல் இருக்கின்றன, அதாவது ஆயுளின் இறுதிக் காலத்தில் (முதுமையில்) வாதம். நடுவயதில் (இளமையில்) பித்தம். ஆயுளின் தொடக்கத்தில் (சிறுவயதில்) கபம் என இவை முக்கியமாகக் காணப்படும்,

அதே போல். பகல் முடிவில் வாதம். நடுப்பகலில் பித்தம். பகலின் தொடக்கத்தில் கபம் என்பவை முக்கியமாக இருக்கும், இரவின் இறுதியில் வாதம். நடுநசியில் பித்தம். இரவின் தொடக்த்தின் கபமும் மிகுந்திருக்கும்,

உணவு சீரணிக்கும் சமயத்தில் வாதம். உண்ட உணவு வயிற்றில் பக்குவமடையத் தொடங்கும் சமயத்தில் பித்தம். சாப்பாட்டிற்குப் பிறகு கபம் இவை மிகுதியாக இருக்கும், (குறிப்பு / உணவு இரைப்பையில் இருக்கும் போது. க்ளேதகம் எனும் கபம் அதை நெகிழச் செய்கிறது, உணவை செரிக்க. இந்தத் தளர்வு எனும் உணவின் நெகிழ்வு மிகவும் அவசியம் சிறு குடல் பகுதியில் அமைந்துள்ள டியோடினம் எனும் இடத்திற்கு உணவு வந்து சேர்ந்தவுடன். பித்தம் அதை மேலும் விரைவாக செரிக்கச் செய்கிறது, பெருங்குடலில் உணவு வந்து சேர்ந்ததும். வாயு தன் சீரான செயல்களின் மூலம் அதிலுள்ள சத்தான நீர்ப்பகுதியை உறிஞ்சிய பிறகு. உணவின் சக்கையை கெட்டியாக்கி மலமாக மாற்றி விடுகிறது,

வாதம். பித்தம். கபம் என்னும் மூன்று தோஷங்களின் காரணமாக சடராக்நி எனும் பசித்தீயானது வாதத்தின் காரணமாக விஷமம் (பசி குறித்த நேரத்தில் வராமல் சில சமயம் நன்றாகவும். சில சமயம் மந்தமாகவும் இருத்தல்), பித்தத்தின் காரணமாக தீஷ்ணம் (உணவு வெகு விரைவில் செரித்து மறுபடியும் பசி எடுக்கும் நிலை). கபத்தின் காரணமாக மந்தம் (சிறிது சாப்பிடாலும் வெகு நேரம் கழித்தே உணவு செரித்தல்) இம்மூன்று தோஷங்களும் நடுநிலையிலிருக்கும் போது சமம் (குறித்த நேரத்தில் 'டான்' என்று பசி எடுப்பது) என நான்கு வகையாகின்றது, ஒரு நியமம் இல்லாமல் பசித்தல். விஷமம். வேகமாக செரித்தல் தீஷ்ணம். மெதுவாக செரித்தல். மந்தம். மற்றவை அதாவது குறித்த நேரத்தில் செரித்தல் சமம்),

'கோஷ்டம் என்னும் மலக்குடலானது வாதத்தினால் கடினமாகவும் (க்ரூர). பித்தத்தினால் மெத்தெனவும். (ம்ருது). கபத்தினால் நடு நிலையாகவும் (மத்ய). அதேபோல் தோஷங்கள் மூன்றும் சமமானால் நடுத்தரமாகவும் (சம) இருக்கும், (நடுத்தரமான விதத்தில் குடலை பேதி மூலம் சுத்தம் செய்து கொள்ளலாம் என்று எண்ணி. பேதி மருந்து சாப்பிட்டால் கடினமான குடல்வாகு கொண்டவருக்குச் குறைவாகவும். மெத்தென குடல்வாகு கொண்டவருக்கு அதிக அளவிலும். நடுநிலை மற்றும் நடுத்தரகுடல்வாகு கொண்டவருக்கு. எண்ணியபடி பேதி நல்ல முறையில் ஆவதும் குடலின் வாகு செய்கிறது,

உடலைப் பற்றிய ஆராயச்சி

உயிரை நீக்கும் இயல்புள்ள நஞ்சில் தோன்றிய புழுவானது அந்த இடத்தினால் அழிவதில்லை, அதே போல் ஆண். பெண் புணர்ச்சியில் வாத / பித்த / கப எழுச்சியைக் கொண்ட விந்து மற்றும் பெண் முட்டையினால் ஏற்படும் உடல். வாத / பித்த / கபமெனும் மூன்று பிரகிருதிகளாக ஆகின்றன, பிரகிருதி அழிவதில்லை, ஈனம் (தாழ்ந்தது). மத்திமம் (நடுத்தரமானது). உத்தமம். (உயர்ந்தது) என்ற இந்த பிரகிருதிகள் மூன்று வகையானவை, வாதப்பிரகிருதி ஈனமானது. பித்தப் பிரகிருதி மத்திமமமானது. கபப்பிரகிருதி உத்தமமானது, எதனுடைய தோஷங்கள் சமநிலையில் உள்ளனவோ அந்தப் பிரகிருதி உயர்ந்தது, இரு தோஷங்களால் தோன்றிய பிரகிருதிகள் நிந்தனைக்குரியவை,

(குறிப்பு / பிரகிருதி என்றால் உடலின் ஸ்வரூபம், தாயினுடைய சோணிதம் எனப்படும் முட்டையிலும் தந்தையினுடைய விந்து அணுக்களிலும் புதைந்துள்ள வாத / பித்த / கபங்களின் சேர்க்கையில் எது மிகுதியாக உள்ளதோ அவைகளே மனிதரின் உடல் அமைப்பைத் தீர்மாணிக்கப்படுகிறது,

வாத தோஷத்தினுடைய ஆதிக்கத்தால் பிறக்கும் குழந்தைகள் ஆரோக்கிய குறைவாகவும் ஆயுளும் நீண்ட அளவில் கிடைக்காமலும் பிறக்கும், பித்த தோஷத்தின் ஆதிக்கத்தினால் பிறக்கும் குழந்தைகள் நடுத்தரமான ஆரோக்கியத்தையும் ஆயுளையும் பெறுவர், கபத்தின்

ஆதிக்கத்தால் பிறக்கும் குழந்தைகள் நல்ல ஆரோக்யம் மற்றும் ஆயுளைப் பெற்று விளங்குவர்,

இவற்றிலும் முக்கியமாக வாதபித்தம். வாதகபம். பித்தகபம் என்ற கலப்பினால் குழந்தை ஜனைமானால் அது ஆரோக்கிய குறைவுடன் இருக்கும் என்பது ஆயுர்வேத மருத்துவத்தின் கருத்தாகும், இந்தப் பிரகிருதிகளைக் கொண்ட மனிதர்கள் பார்ப்பதற்கு எப்படி இருப்பார்கள்? அவர்களுடைய செயல் எப்படி? மனத்தின் செயல்கள் போன்றவற்றைப் பிறகு பார்ப்போம்,